20.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மானாவாரி மக்காசோளத்தில் கூடுதல் மகசூல் பெற ஆலோசனை

பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரி மக்காசோளத்தில் கூடுதல் மகசூல் பெற விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் வேளாண் இணை இயக்குநர் பி. சந்திரன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கோடை உழவுக்குப் பின் 2 ஆம் உழவில் ஏக்கருக்கு 5 டன் தொழுவுரமும், களர் நிலமாக இருந்தால் ஏக்கருக்கு 4 மூட்டை (200 கிலோ) ஜிப்சமும் இட்டு உழ வேண்டும். கடைசி உழவில் அடியுரமாக மண் பரிசோதனை அடிப்படையில் பரிந்துரைக்கப்பட்ட அளவில் யூரியா, டி.ஏ.பி அல்லது காம்ப்ளக்ஸ் உரங்களை இட்டு உழ வேண்டும்.

ஏக்கருக்கு 1 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் 1 கிலோ பாஸ்போபாக்டீரியாவை 15 கூடை நன்கு மட்கிய தொழுவுரத்துடன் கலந்து, போதியளவு ஈரப்பதத்துடன் நிழலில் 15 முதல் 20 நாள்களுக்கு வைத்திருந்து, விதைத்த 15 அல்லது 20 வது நாளில் வயலில் இட வேண்டும். மானாவாரி மக்காசோளத்துக்கு பரிந்துரைக்கப்பட்ட இடைவெளியானது பாருக்கு பார் 45 செ.மீ, செடிக்கு செடி 30 செ.மீ. ஆகும். எனவே, 45 செ.மீ இடைவெளியில் பார்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். 45 செ.மீ அல்லது 0.45 மீ இடைவெளியில் பார்களும், 30 செ.மீ அல்லது 0.30 மீ இடைவெளியில் செடிகளும் இருக்க வேண்டும்.

1 ஏக்கருக்கு பரிந்துரைக்கப்பட்ட விதையளவானது 8 முதல் 10 கிலோ அல்லது 30,000 விதைகள் இருக்கும் பட்சத்தில், ஒரு செடியில் உள்ள கதிரில் இருந்து குறைந்தபட்சமாக 100 கிராம் மணிகள் கிடைத்தால் ஏக்கரில் 3 டன் மகசூல்

பெறலாம். மேலும், ஒரு கதிரில் சராசரியாக 160 கிராம் மணிகள் கிடைத்தால், ஏக்கருக்கு 4.8 டன் மகசூல் பெறலாம்.

ஒரு ஏக்கரில் 30,000 செடிகள் இருக்குமாறு பயிர்களின் எண்ணிக்கையைப் பராமரிக்க வேண்டும். இதற்கு கயிறு பிடித்து வரிசை நடவு முறையில் நடுவதே சிறந்த வழியாகும். மேலும், விதைகளை நடும்போது 4 செ.மீ ஆழத்தில் நட வேண்டும். மண் பரிசோதனை அடிப்படையில் மேலுரம் இடும்போது ஏக்கருக்கு 5 கிலோ நுண்ணூட்ட உரத்தையும் தவறாமல் இட வேண்டும்.

ஆக, விவசாயிகள் மானாவாரி மக்காசோளத்தில் தொழுவுரம், மண் பரிசோதனை அடிப்படையில் உரங்கள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரம், ஏக்கருக்கு 30,000 செடிகள், வரிசை நடவு ஆகிய யுத்திகளை கடைபிடித்தால் கூடுதல் மகசூல் பெறலாம்.

## ராமநாதபுரம் மாவட்டத்தில் 2131 பண்ணைக் குட்டைகள் அமைக்க முடிவு

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு வாரத்துக்குள் 2131 பண்ணைக் குட்டைகள் அமைக்க முடிவு செய்திருப்பதாக வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் எஸ்.நடராஜன் பேசினார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலக ஊராட்சி மன்ற கூட்ட அரங்கில் நடந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் எஸ்.நடராஜன் பேசியது:ராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் 2131 பண்ணைக் குட்டைகள் ஒரு வாரத்திற்குள் அமைக்க முடிவு செய்யப்பட்டு அதற்கான பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இதுவரை 1130 மனுக்கள் மட்டுமே வந்துள்ளது. மீதமுள்ள இடங்களுக்கு விவசாயிகள் விரைவாக விண்ணப்பித்து பயன் பெறலாம்.

பண்ணைக்குட்டை அமைக்க மானியம் வழங்கப்படுவதால் விவசாயிகள் அதிகாரிகளை தொடர்பு கொண்டு பயன் பெறலாம். செப்டம்பர் 5 ஆம் தேதிக்குள் அனைத்துப் பண்ணைக்குட்டைகளும் அமைக்கப்பட்டுவிட வேண்டும் என அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மீன்வளத் துறையின் சார்பில் ஒரு ஹெக்டேருக்கு ரூ.5 லட்சம் மதிப்பில் மீன் பண்ணைக் குட்டைகளை அமைக்கலாம். இதில் மானியமாக ரூ.2 லட்சமும், மீன்குஞ்சுகள் வாங்க ரூ.10 ஆயிரம் உள்பட ரூ.2.10 லட்சம் மானியமாக

வழங்கப்படும். கால்நடைத்துறையின் சார்பில் விலையில்லா வெள்ளாடுகள் 57 ஊராட்சிகளிலும்,9 ஊராட்சிகளில் விலையில்லா கறவை மாடுகளும் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 22 ஆம் தேதி அந்தந்த கிராமங்களில் நடைபெறும் கிராமசபைக் கூட்டங்களில் பெறப்பட்டு மறுநாளே அவை பரிசீலிக்கப்படும். 29 ஆம் தேதி மீண்டும் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அதில் பயனாளிகள் தேர்வுப் பட்டியல் அறிவிக்கப்படும்.

சீமைக்கருவேல மரங்களை தூரோடு அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாரதப்பிரதமரின் புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கடன் பெற்ற மற்றும் பெறாத விவசாயிகள் பங்கேற்று பயன் பெறலாம். இழப்பீட்டுத் தொகை 70 சதவிகிதம் முதல் 90 சதவிகதம் வரை வழங்கப்படும். இந்த காப்பீட்டுத் திட்டத்தில் முறைகேடுகள் எதுவும் செய்ய வாய்ப்பில்லை. வட்டார அளவில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடத்தப்பட்டு பயிர்க்காப்பீடு தொடர்பான விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்படும் என்றார்.

முன்னதாக, கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அதிகாரி மு.அலிஅக்பர்,வேளாண்மை இணை இயக்குநர் அரிவாசகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) வெள்ளைச்சாமி வரவேற்று பேசினார். பல்வேறு துறை அதிகாரிகளும் கலந்து கொண்டு அத்துறைகள் மூலம் விவசாயிகளுக்கு அரசு செய்து வரும் நலத்திட்ட உதவிகளை விளக்கினர்.

பார்த்தீனியம் விஷச்செடி ஒழிப்பு குறித்தும், நெல் விதைகளை தேர்வு செய்யும் விதம் குறித்தும் விவசாயிகளுக்கு குறுந்தகடு மூலம் திரையிட்டுக் காட்டப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டது.

## பாம்பனில் ஊசிக் கணவாய் கிளாத்தி மீன்களின் வரத்து அதிகம்

பாம்பன் பகுதியில் இருந்து கடலுக்குச் சென்று வெள்ளிக்கிழமை திரும்பிய மீனவர்களின் வலைகளில் ஊசிக் கணவாய், செருப்புக் கிளாத்தி மீன்கள் 500 கிலோ வரை கிடைத்திருந்ததால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

பாம்பன் பகுதியிலிருந்து வியாழக்கிழமை காலை 87 படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். தென்கடல் பகுதியில் ஆழ்கடல் மீன் பிடிப்பை முடித்து வெள்ளிக்கிழமை காலையில் கரை திரும்பினர். அனைத்து மீனவர்களுக்கும்

செருப்பு கிளாத்தி, ஊசிக் கணவாய், ஊழி, சுவாரை, விளமீன் போன்றவை சராசரியாக 80 முதல் 140 கிலோ வரை கிடைத்திருந்தது. இதில் களஞ்சியம் என்பவரின் படகில் சென்ற மீனவர்களுக்கு ஊசிக் கணவாய் மீன்கள் 570 கிலோ வரை கிடைத்திருந்தது. அந்தோணிராஜ் படகில் சென்ற மீனவர்களுக்கு செருப்பு கிளாத்தி மீன் 535 கிலோ கிடைத்திருந்தது.

ஊசிக்கணவாய் கிலோ ரூ. 200க்கும், செருப்பு கிளாத்தி மீன்கள் கிலோ ரூ.150க்கும் வியாபாரிகள் வாங்கி சென்றனர். போதுமான லாபம் கிடைத்ததால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## மண்டபத்தில் விரைவில் அலங்கார மீன் உற்பத்தியகம்: மீன்வளப் பல்கலை. துணைவேந்தர்

மண்டபத்தில் விரைவில் அலங்கார மீன் உற்பத்தியகம் அமைக்கப்படும் என தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழக துணைவேந்தர் கு.ரெத்தினக்குமார் ராமநாதபுரத்தில் பேசினார்.

ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இறால் பண்ணை தொழிலாளர்களுக்கான தொழில் நுட்பப் பயிற்சி வெள்ளிக்கிழமை தொடங்கியது.

பயிற்சியைத் தொடக்கி வைத்து தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழக துணைவேந்தர் கு.ரெத்தினக்குமார் பேசியது: தமிழகத்தில் மீன்வளக் கல்லூரிகள் நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது. இங்கு இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகள் பயிற்று விக்கப்படுகின்றன. கடந்த ஆண்டு முதல் நாகப்பட்டினம் மீன்வளக் கல்லூரியில் பொறியியல் படிப்பும் தொடங்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் 20 பேர் இப்படிப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூரில் சிலேபிக் கெண்டை என்னும் ஒரு வகை மீன் குஞ்சுகள் பொறிப்பகம் மற்றும் உற்பத்தி மையம் செயல்பட்டு வருகிறது.

மண்டபம் அருகே சீனியப்பா தர்ஹா பகுதியில் கடல் மீன் குஞ்சு பொறிப்பகம் அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் இம்மையத்தில் அலங்கார மீன் உற்பத்தியகமும் தொடங்கப்படவுள்ளது என்றார்.

பயிற்சி முகாமிற்கு மீன்வளப் பல்கலைக்கழக விரிவாக்க இயக்குநர் மு.நாகூர்மீரான்,ரிலையன்ஸ் அறக்கட்டளையின் மாவட்ட திட்ட மேலாளர் ரா.ஸ்ரீகிருபா ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக மீன்வளப் பல்கலைக்

கழக உதவிப் பேராசிரியர் ச.ஆனந்த் வரவேற்று பேசினார். பயிற்சியில் இறால் பண்ணைகளில் பணிபுரியும் 30 தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

**பயிர் சாகுபடி, நுண்ணீர்ப் பாசன கருத்தரங்கு இன்று துவக்கம்**

தோட்டக்கலைப் பயிர் சாகுபடி, நுண்ணீர் பாசனப் பயன்பாடு குறித்த கருத்தரங்கம் கவுந்தப்பாடியில் சனி (ஆகஸ்ட் 20), ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

தோட்டக்கலைத் துறை சார்பில் நடைபெறும் இக்கருத்தரங்குக்கு ஆட்சியர் எஸ்.பிரபாகர் தலைமைவகிக்கிறார். சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கே.சி.கருப்பணன் கருத்தரங்கைத் தொடங்கிவைக்கிறார். மக்கள் பிரதிநிதிகள், தொழில்நுட்ப அலுவலர்கள், விஞ்ஞானிகள், விவசாயிகள், வணிகர்கள், பொதுமக்கள் பங்கேற்கவுள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தோட்டக்கலைக் கல்லூரியைச் சேர்ந்த விஞ்ஞானிகள், பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் ஆகியோர் பல்வேறு தலைப்பு களில் உரையாற்றுகின்றனர். தோட்டக்கலைத் துறை, வேளாண் துறை, வேளாண் வணி கம் மற்றும் விற்பனைத் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் அறிவியல் நிலையம், தமிழ்நாடு வேளாண் ஆராய்ச்சி நிலையம் ஆகியவயற்றின் சாதனைகள், புதிதாக அறிவிக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் ஆகியவை கருத்துக் காட்சிகளாக அமைக்கப்படும். இதில், விவசாயிகள் திரளாகக் கலந்துகொண்டு பயனடைய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

**மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தோட்டக்கலைத் துறையின் மூலம் நீலகிரி விவசாயிகளுக்கு ஸ்டிரா பெர்ரி நாற்றுகள் வழங்கும் திட்டமில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் உதகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கரபாண்டியன் தலைமை வகித்தார்.

தோட்டக்கலைத் துறையின் மூலம் ஸ்டிராபெர்ரி நாற்றுகள் வழங்கும் திட்டமில்லை எனவும், நிலப் போர்வை விரிப்புகள் மானிய விலையில் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மத்திய, மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் கறவை மாட்டுக் கடன் திட்டம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 33 சதவீத மானியத்தில் கடன் வழங்கப் பட்டு வருவதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

உதகை நகருக்கு உள்பட்ட கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளின் வருவாய் ஆவணங் கள் கணினி மயமாக்கப்படவில்லை என்பதால் இதுதொடர்பாக அரசின் முடிவை அடுத்தே கணினி மூலம் சிட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நீலகிரி மக்களவைத் தொகுதி உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் தாம்பட்டி முதல் காட்டேரி வரையுள்ள ஓடையை தூர்வாரும் பணிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அனுப்பப்பட்டுள்ளதாகவும், இதற்கான ஒப்புதல் கிடைத்ததும் பணிகள் தொடங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆடாசோலை முதல் அனிக்கொரை வரையிலான சாலை மேம்பாட்டு பணிகள் விரைவில் தொடங்கப் டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் மணி உள்பட அத்துறை அதிகாரிகளும், பிற துறைகளின் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

## ஆக.26-ல் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 26 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் ஆட்சியர் மு.ஆசியா மரியம் தலைமையில் நடைபெற உள்ளது. இக் கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, விவசாயம் தொடர்பான பல்வேறு தகவல்களைத் தெரிந்துகொள்வதுடன், நிலம், பால் தொடர்பான பிரச்னைகள் மற்றும் விவசாயம் தொடர்பான குறைகள் ஏதேனும் இருப்பின், அவற்றைத் தெரிவித்து உரிய நிவாரணம் பெறலாம். மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏற்காட்டில் காபி விவசாயிகளுக்கு வாரியம் வேண்டுகோள்

சேர்வராயன் மலையில் காபி தோட்டங்களில் காய் துளைப்பானின் தாக்கம் காணப்படுகின்றது. காபி தோட்டங்களில் காபி பருப்பு முற்றாத நிலை ஏற்பட்டுள்ளதால், காய்களின் நுனிப் பகுதியில் காய் துளைப்பான் உள்ளே செல்வதற்கான சூழல் உள்ளது என்று காபி வாரியம் தெரிவித்துள்ளது. காபி விவசாயிகள் காபி வாரியம் பரிந்துரைத்த பூச்சி மருந்தை குளோரிபைரியாஸ் 20 ஈ.சி.600 மில்லி லிட்டரை 200 மில்லி லிட்டர் தண்ணீர் மற்றும் 200 மில்லி லிட்டர் ஒட்டும் திரவத்துடன் சேர்த்து முதுகில் சுமக்கும் தெளிப்பானைப் பயன்படுத்தி காய் கொத்துகளின் மீது படுமாறு தெளிக்க வேண்டும். மேலும், காபி காய்த் துளைப்பான் பாதித்த தோட்டங்களில் மட்டும் மருந்து தெளிக்க வேண்டும் எனவும் ஏற்காடு காபி வாரிய ஆராய்ச்சி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஆக. 26-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகப் பெருந்திட்ட வளாகத்தில் கீழ்தளத்தில் உள்ள கூட்ட அரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஆக. 26-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஆ. அண்ணாதுரை மேலும் தெரிவித்திருப்பது:

இந்தக் கூட்டத்தில் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்று, நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தோட்டக்கலைத் துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துகளை மட்டும் தெரிவிக்கலாம்.

இதில், கருத்துகளைத் தெரிவிக்க விரும்புபவர்கள் தங்களது பெயர், ஊர், வட்டாரத்தை ஆக. 26-ம் தேதி காலை 9 மணி முதல் 10 மணி வரை கணினியில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும், விவசாயிகள் தங்கள் கோரிக்கை மனுக்களை கணினியில் பதிவு செய்து ஒப்புதல் பெற்று, பிறகு அளிக்க வேண்டும்.

**"நாகை மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி மகசூல் சராசரி 4.2 டன்'**

நாகை மாவட்டத்தில் நிகழாண்டின் குறுவை நெல் சாகுபடி மகசூல் சராசரி, ஹெக்டேருக்கு 4.2 டன்னாக உள்ளது என நாகை மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாகை மாவட்டத்தின் வழக்கமான குறுவை நெல் சாகுபடி பரப்பு 35 ஆயிரம் ஹெக்டேர். நிகழாண்டில், குறுவை தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டதால் மாவட்டத்தில் 36,456 ஹெக்டேரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

குறுவைத் தொகுப்பு திட்டத்தின் கீழ், 15 ஆயிரம் ஏக்கர் பரப்பில் இயந்திர நடவு செய்த விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக ஏக்கருக்கு ரூ. 4 ஆயிரம் வீதம், 4,153 விவசாயிகளுக்கு ரூ. 6 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கருக்கு 10 கிலோ வீதம், 27 ஆயிரம் ஏக்கர் பரப்புக்கு சிங்க் சல்பேட் உரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ. 1.06 கோடி. இதில், 7,990 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். 20 ஆயிரம் ஏக்கர் பரப்புக்கு, ஏக்கருக்கு 5 கிலோ வீதம் 100 டன் நெல் நுண்ணூட்ட உரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ. 30.7 லட்சம்.

710 விவசாயிகளுக்கு 250 யூனிட்டுகள் விலையில்லா எச்.டி.பி.இ குழாய்கள் ரூ. 50 லட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன. காவிரி பாசன பகுதியில் பயறுவகை பயிர் சாகுபடிக்காக 1,000 ஏக்கருக்கு ரூ. 500 வீதம் 621 விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர, ஏக்கருக்கு 8 கிலோ வீதம், 8 ஆயிரம் கிலோ உளுந்து விதைகள் ரூ. 11.6 லட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன. வெண்ணாறு பாசன பகுதியில் பசுந்தாளுர பயிர் சாகுபடிக்காக 15 ஆயிரம் ஏக்கரில் உழவுப் பணி மேற்கொண்ட விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக ரூ. 75 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பசுந்தாளுர விதைகள் விதைப்புக்கு ரூ. 1.56 கோடி மதிப்பில் 300 டன் தக்கைப் பூண்டு விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நிகழாண்டில், இதுவரை 6,820 ஹெக்டேர் பரப்பில் குறுவை நெல் அறுவடைப் பணிகள் நிறைவடைந்துள்ளன. மாவட்டத்தில் அதிகளவாக ஹெக்டேருக்கு 5.62 டன் மகசூலும், குறைந்த அளவாக 2.68 டன் மகசூல் கிடைக்கப் பெற்றுள்ளது. இதன்படி, மாவட்டத்தின் சராசரி நெல் மகசூல் 4.25 டன்னாக உள்ளது என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு விதைகள், மண்வள அட்டை அளிப்பு

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் தோட்டக்கலைத் துறை சார்பில் காய்கறி விதைகள் வழங்கப்பட்டன.

11 விவசாயிகளுக்கு மண் வள அட்டைகளையும், 3 விவசாயிகளுக்கு முதியோர் உதவித்தொகைக்கானஆணைகளையும்ஆட்சியர் மு.கருணாகரன் வழங்கினார். இவை தவிர தக்காளி, கீரை, தடியங்காய், சீனி அவரை உள்ளிட்ட 10 வகையான காய்கறி விதைகள் அடங்கிய விதைப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன. கடந்த மாதம் பெறப்பட்ட 188 மனுக்களில் வேளாண் சார்ந்த 83 மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து கூட்டத்தில் பதில் தெரிவிக்கப்பட்டது. இக் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ம.க. குழந்தைவேல், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் கனகராஜ்,ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சாந்திராணி, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் கண்மன், தரக் கட்டுப்பாடு உதவிஇயக்குநர் நாராயணன் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## பாசனத்துக்கு சுழற்சி முறையில் நீர் திறப்பு

தாமிருவருணி பாசனத்தில் பாபநாசம் அணையில் இருந்து திருநெல்வேலி மாவட்டத்தில் வடக்கு மற்றும் தெற்கு கோடைமேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய், கோடகன் கால்வாய், கன்னடியன் கால்வாய், பாளையம் கால்வாய், திருநெல்வேலி கால்வாய் ஆகியவை மூலம் 40 ஆயிரம் ஏக்கரும், தூத்துக்குடி மாவட்டத்தில் மருதூர் மேற்கு மற்றும் கிழக்கு கால்வாய், ஸ்ரீவைகுண்டம் வடக்கு

மற்றும் தெற்கு கால்வாய் ஆகியவை மூலம் 46,107 ஏக்கரும் பாசனம் பெற்று வருகின்றன.

நிகழாண்டு கார் பருவ சாகுபடிக்கு ஜூன் 9 இல் அணைகளிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. செப். 30 ஆம் தேதி வரை தண்ணீர் வழங்க வேண்டிய நிலையில், அணைகளில் நீர் இருப்பு வெகுவாக குறைந்துள்ளது. வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 143.20 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு 6 கனஅடி நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 56.15 அடி, சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 70.08 அடி, மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 65.62 அடியாக இருந்தது. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பாசனம், குடிநீர் தேவைக்கு பிரதான அணைகளில் இருந்து 1200 கனஅடி நீர் திறக்கப்பட்டது. பாசனக் கால்வாய்களில் சுழற்சி முறையில் தண்ணீர் விநியோக முறை அமல்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

4,000 ஹெக்டேரில் நெல் சாகுபடி குறைவு: தாமிரவருணி பாசனத்தில் பிசானப் பருவத்தை விட கார் பருவத்தில் நெல் சாகுபடி அதிகம் இருக்கும். கடந்த 2015 இல் 20 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. நிகழாண்டு 23 ஆயிரம் ஹெக்டேரில் நெல் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், இதுவரை 16,020 ஹெக்டேர் மட்டுமே நெல் நடவு செய்யப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நாக்பூரில் ஆராய்ச்சி

இந்தியாவின் ஆரஞ்சு நகரம் என நாக்பூர் அழைக்கப்படுகிறது. சிட்ரஸ் பழங்களுக்கான ஆராய்ச்சி நிலையமும்நாக்பூரில் தான் உள்ளது. இந்தியில் ஆரஞ்சை 'ஸந்த்ரா' என அழைக்கின்றனர்.நாக்பூர், வார்தா, விதர்பா பகுதியில் ஆரஞ்சு அதிகமாக விளைகிறது. எனவே தான் இப்பகுதியில் ஓர் ஊருக்குப் பெயரே 'ஸந்த்ராப்பூர்' என வைக்கப்பட்டுள்ளது. குளிர்,பனி அதிகமாக அதிகமாக ஆரஞ்சு விளைச்சலும், சுவையும் அதிகமாகும். குளிர்காலத்தில் வைரஸ் காய்ச்சலினால்ஏற்படும் கை, கால் மூட்டு வலியைச் சமாளிக்க உதவும் பொட்டாசியச் சத்து ஆரஞ்சில் உள்ளது.

## மானிய விலையில் சில்வர் ஓக் நாற்றுகள்

கோத்தகிரி: 'கோத்தகிரி பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில், சில்வர் ஓக் மற்றும் பழநாற்றுகள் வழங்கவேண்டும்' என, விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

கோத்தகிரி பகுதியில், அதிக நிலப்பரப்பில், தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. நீர் ஆதாரம் உள்ள நிலங்களில், மலைக்காய்கறி பயிர் செய்யப்படுகிறது.

தேயிலை தோட்டங்களுக்கு நடுவே, நிழலுக்காகவும், ஊடுபயிராகவும் சில்வர் ஓக் மற்றும் பழ நாற்றுகளை விவசாயிகள் நடவுசெய்துள்ளனர்.

இதன்மூலம், ஓரளவுக்கு குடும்ப செலவுகளை, விவசாயிகள் சமாளித்து வருகின்றனர்.

சமீபக் காலமாக, குரங்கு, காட்டெருமை உள்ளிட்ட வன விலங்குகளால், தோட்டங்களில் சில்வர் ஓக் மற்றும் பழ நாற்றுகள் சேதம் அடைந்து வருகின்றன.

இதனால், பெரும்பாலான தோட்டங்களில், இவ்வகை மரங்கள் இல்லாமல் போய்விட்டது. பசுந்தேயிலைக்கு, விலை வீழ்ச்சி ஏற்படும் நேரங்களில், விவசாயிகள் குடும்பங்களை நகர்த்தவே முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

விவசாயிகள் கூறுகையில்,'தற்போதுள்ள சூழ்நிலையில், தேயிலை தோட்டங்களில் பழம் மற்றும் சில்வர் ஓக் நாற்றுகளை, உரிய நேரத்தில் மானிய விலையில் வழங்கவேண்டும்' என்றனர்.

## வரத்து அதிகரிப்பு: சரிந்தது தக்காளி விலை

தேவாரம் தேவையை விட வரத்து அதிகமாக இருப்பதால் தேவாரம் மார்க்கெட்டில் காய்கறிகள் விலை வீழ்ச்சியடைந்துள்ளன. கடந்த வாரம் ரூ.100க்கு மேல் விற்பனையான தக்காளி பெட்டி (14 கிலோ), விலை சரிந்து ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனையாகிறது. தினமும் ஆயிரத்து 500 பெட்டிக்கு மேல் தக்காளி வரத்துள்ளது. வெளிமாவட்ட வியாபாரிகள் வராததால் விலை சரிந்துள்ளது. கடந்த வாரம் கிலோ ரூ.25க்கு மேல் விற்பனையான அவரைக்காய் ரூ.15க்கும், பச்சை மிளகாய் விலை மாற்றமில்லாமல் ரூ.22க்கும் விற்பனையாகிறது. மற்ற காய்கறிகள் விலை விபரம்(கிலோ):

பாகற்காய் ரூ.10, பீட்ரூட் ரூ.8 முதல் ரூ.9க்கும், கத்தரிக்காய் ரூ.5 முதல் ரூ.8க்கும், புடலங்காய் ரூ. 5 முதல் ரூ. 8 க்கும், வெண்டை ரூ.6 முதல் ரூ.8க்கும், சீனி அவரை ரூ.6முதல் ரூ.8க்கும், தட்டை பயிறு ரூ. 8 முதல் ரூ.9க்கும், பூசணி ரூ. 8, பீர்க்கங்காய் ரூ.9க்கும் விற்பனையாகிறது. மொத்தத்தில் காய்கறி விலை சரிந்துள்ளதால் விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளனர். ஏ.எஸ்., கமிஷன் கடை உரிமையாளர் வெங்கடேசன் கூறுகையில், 'ராஜபாளையம், அருப்புக்கோட்டை, தஞ்சாவூர் பகுதியிலிருந்து மொத்த வியாபாரிகள் வந்த போது ஒரு பெட்டி தக்காளி ரூ.100க்கு மேல் விற்பனையானது. உடுமலைபேட்டை, பழநியில் தக்காளி விளைச்சல் அதிகரித்துள்ளதால் வட மாவட்டங்களில் இருந்து வரும் வியாபாரிகள் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் கொள்முதல் செய்கின்றனர். மொத்த விற்பனையாளர்கள் வராததால் உள்ளூர் சில்லரை வியா பாரிகளுக்கு விற்பதால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது,' என்றார்.

**நிலக்கடலையில் மகசூல்: விவசாயிகளுக்கு பயிற்சி**

தர்மபுரி: மானாவரி நிலக்கடையில் அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், பெரியூரில் பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை அறிவியல் நிலைய மண்ணியல் துறை உதவி பேராசிரியர் சங்கீதா தலைமை வகித்து, உழவியல் தொழில்நுட்பங்களான மண் ஈரம் காக்க உளிக்கலப்பை உழவு மற்றும் அங்கக உரமிடுதல், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள் குறித்து பேசினார். உதவி பேராசிரியர் வெண்ணிலா, உதவி பேராசிரியர் (கால்நடை) தங்கதுரை ஆகியோர், தங்கள் துறை சார்ந்த அறிவுரைகளை வழங்கினர். முகாமில், விவசாயிகளுக்கு நிலக்கடலை ரிச் ஊட்டச்சத்து கலவையை இலைவழி தெளிப்பு செய்வது பற்றிய செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. மேலும், நிலக்கடலையில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த விவரங்கள் அடங்கிய கையேடு இலவசமாக வழங்கப்பட்டது. பயிற்சியில், பெரியூர், கொல்லப்பட்டி கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மாவட்டத்தில் ஆண்டுக்கு 1800 டன் வேப்பங்கொட்டை கொள்முதல்**

அரூர் : தர்மபுரி மாவட்டத்தில் இருந்து ஆண்டுக்கு 1800 டன் வேப்பங்கொட்டை கொள்முதல் செய்யப்படுகிறது. தேவை அதிகரிப்பால் விலையும் உயர்ந்துள்ளது. வேப்பமரத்தின் இலை, பூ, பழம், விதை, பட்டை, எண்ணெய் உள்பட அனைத்து பகுதிகளும் மருத்துவ குணம் கொண்டவை. அரிட்டம், துத்தை, நிம்பம், பாரபத்திரம், பிதமந்தம், வாதாளி உள்ளிட்ட பல்வேறு பெயர்கள் வேம்புக்கு உள்ளது. ஆலமரம், அரச மரத்தை போல் வேப்ப மரமும் நீண்ட காலம் வளரும் மரமாகும்.

எப்போதும் பசுமையாக இருக்கும். ஆனி துவங்கி ஆடி, ஆவணி வரை வேப்பம் பழங்கள், மரத்தில் இருந்து பழுத்து உதிரும். கிராமப்புற மக்கள் இதனை சேகரித்து விற்பனை செய்கின்றனர். தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தானிய மண்டிகளிலும் வேப்பங்கொட்டை கொள்முதல் செய்யப்படுகிறது. இங்கு ஆண்டுக்கு 1800 டன் வேப்பங்கொட்டை கொள்முதலாகிறது.

கடந்தாண்டு ஒரு கிலோ வேப்பங்கொட்டை ரூ.37க்கு கொள்முதல் செய்யப்பட்டது. நடப்பாண்டு கிலோ ரூ.70க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. தேவை அதிகரிப்பால் நடப்பாண்டில் விலை உயர்ந்துள்ளது. மருந்து கம்பெனிகளும், உரத்தயாரிப்பு கம்பெனிகளும் இதனை மொத்தமாக வாங்கி செல்கின்றன. தற்போது விலை அதிகம் கிடைப்பதால் கிராமப்புற பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் அதிக அளவில் வேப்பங்கொட்டை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.